*1994 ஏப்ரல் 18]*

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

**அறிக்கை**

பேராவூரணி தொகுதி, இடையாத்தி நெடுஞ்சாலையின் குறுக்கே கல்லணைக் கால்வாயில் உள்ள பாலம் நீண்ட நாட்களுக்கு முன்னர் பொதுப்பணித் துறையினரால் கட்டப்பட்ட 3 கண்களைக் கொண்ட 18.60 மீ. நீர்வழிப் பாதையுடைய குறுகிய வலுவிழந்த பாலமாகும். இப்பாலத்தில் ஏற்பட்ட பழுதுகள் ரூ. 2.00 லட்சம் மதிப்பில் கின்னட்டிங் முறையில் சீர் செய்யப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகின்றது.

**(ஆ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் போளூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. தா. வேடியப்பன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. தா. வேடியப்பன்.

***திரு. தா. வேடியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் போளூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க மாவட்ட வளர்ச்சி மன்றம் மூலம் பரிந்துரை செய்தும் இன்னும் அமைக்கப்படாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை**

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்களை உள்ளடக்கிய முந்தைய ஒருங்கிணைந்த வட ஆற்காடு மாவட்டத்தில் மூன்றாவது பால் பெருக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது திருவண்ணாமலையில் ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவுடன் ஒரு பால் குளிரூட்டும் நிலையம்

செயல்பட்டு வருகிறது. போளூர் சரகத்தில் உற்பத்தி செய்யப்படும் பால், தற்சமயம் திருவண்ணாமலை குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

போளூரில் ஒரு குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு தேசிய பால்வள வாரியத்தினால் நிராகரிக்கப்பட்டது.

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் அமைக்கப்பட்ட பின்பு இக்கோரிக்கை குறித்து மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுவில் பரிசீலிக்கப்பட்டு, போளூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க தீர்மானமும் இயற்றப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் நிர்வாக இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிதி உதவியுடன் ரூ.75 லட்சம் செலவில் போளூரில் ஒரு குளிரூட்டும் நிலையம் அமைக்க ஜனவரி 1994-ல் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு முன் மொழிவுகள் அனுப்பியுள்ளார். அது மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

போளூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதியில் அதிக அளவில் பால் உற்பத்தி செய்யும் 150 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்பகுதியில் கிடைக்கக்கூடிய அதிகப்படியான பால், அருகில் உள்ள திருவண்ணாமலை பால் குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு குளிர்பதனப்படுத்தப்படுகிறது. எனவே, போளூர் பகுதியில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு எவ்விதச் சிரமமும் ஏற்படவில்லை.

முற்பகல் 11-15

**திரு. தா. வேடியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் பார்த்தேன். திருவண்ணாமலை, செய்யாறு, வேலூர் ஆகிய மூன்று இடங்களிலுள்ள பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு எங்களுடைய போளூரிலிருந்து பால் அனுப்பப்படுகிறது. ஆனால் திருவண்ணாமலைக்கு மட்டும் அனுப்பப்படுவதாக இதிலே தகவல் கொடுத்திருக்கிறார்கள். இந்த மூன்று பால் குளிரூட்டு நிலையங்களுக்கும் பால் அனுப்பப்படுகிறது. அதுமட்டுமல்லாமல்

*1994-95* ஆம் ஆண்டு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தின் மூலம் நிறைவேற்றி தேசிய பால் வள வாரியத்திற்கும் அது அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் தேசிய பால் வள வாரியத்தால் நிராகரிக்கப்பட்டது என்று தெரிவித்து இருக்கிறார்கள், இருப்பினும், கடந்த ஆண்டு இப்படிப்பட்ட பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் வாய்ப்பு இல்லையென்று கருதினார்கள். ஆனால், இந்த ஆண்டு *1994-95*-ல், பரிசீலிக்கலாம் என்று மேலாண்மை இயக்குநர் அவர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தெரிவித்து இருக்கிறார்கள். இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, இந்த நிதியாண்டில் சேர்த்து ஏற்படுத்த ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் நிர்வாக இயக்குநர் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பி இருக்கிறார்கள். அது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. தா. வேடியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் . . . *(குறுக்கீடுகள்)*

## 2. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளி வைக்கப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை-பேரவைத் தலைவரின் தீர்ப்பு-தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். லாபியில் யாரேனும் உறுப்பினர்கள் முறைகேடாக நடந்து கொண்டிருந்தால் அவர்களை அப்புறப்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன். திரு. கே.பி. ராஜூ, உள்ளே வர வேண்டும். லாபியில் உறுப்பினர்கள் யாரேனும் முறைகேடாக நடந்து கொள்கிறார்கள் என்றால் அவர்களை அங்கேயிருந்து அப்படியே அப்புறப்படுத்த வேண்டும். திரு. கே.பி.ராஜூ, உங்களுடைய இருக்கைக்குப் போகவும். திரு. வேடியப்பன், பேசுங்கள்.

## 3. கவன ஈர்ப்பு-தொடர்ச்சி.

### (ஆ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் போளூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து-தொடர்ச்சி

**திரு. தா. வேடியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி முகமை மூலம் 75 இலட்சம் ரூபாய் என்பது பெரிய தொகையாக இருக்கிறது. எங்களுடைய திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் திருவண்ணாமலையில் ஒரு பால் குளிரூட்டும் நிலையமும், செய்யாறு பகுதியில் அனக்காவூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையமும் இருந்து வருகின்றன. இந்த இரண்டு பகுதிகளுக்கும் பால் செல்கிறபோது, பல பகுதிகளிலிருந்து பால் எடுத்துச் செல்வதால், சிலநேரங்களில் பால் தயிராகி பால் உற்பத்தியாளர்களுக்குக் குறைபாடுகள் ஏற்படுகின்றன. மேலும் 150 சங்கங்கள் இருப்பதாக இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். ஏறத்தாழ போளூர் பகுதியில் மட்டும் 75,000 லிட்டர் பால் (குறுக்கீடு).

## 2. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளி வைக்கப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை-பேரவைத் தலைவரின் தீர்ப்பு-தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை நடந்து கொண்டிருக்கிற நேரத்தில் இங்கேயிருந்து வெளியேறிய உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, மற்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, லாபியில் உரத்த குரல் எழுப்பி, சத்தமிட்டுக் கொண்டிருப்பது பேரவையினுடைய நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிப்பதாக இருக்கும். எனவே, அப்படிப்பட்டவர்கள்மீது, நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடுகள்) இப்போது அங்கே ஓர் உறுப்பினர், வெளியேறிய உறுப்பினர், புகை பிடித்துக் கொண்டிருந்திருக்கிறார். காவலர் ஒருவர் சென்று, இது ஏ.சி. செய்த மண்டபமாக இருக்கிற காரணத்தால் லாபியில் இருந்து புகைபிடிப்பது, இந்தச் சுற்றுச் சூழலைக் கெடுக்கும் என்ற காரணத்தால், புகை பிடிக்க வேண்டாம் என்று கேட்டிருக்கிறார். புகை பிடிக்க வேண்டாம் என்று கேட்டதற்காக அந்தக் காவலரை வாய்க்கு வந்தபடி திட்டுகிற நிலையிலேதான் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களும் சென்றிருக்கிறார்கள் என்று சொன்னால், இதை எந்த

அளவுக்கு நாடு ஏற்றுக்கொள்ளும் என்பதைத்தான் அறிய விரும்புகிறேன். புகை பிடிக்க வேண்டாம் என்று சொன்னதற்காக ஒரு காவலரை வாய்க்கு வந்தபடி பேசுகிற நிலையிலேதான் காங்கிரஸ் கட்சி, சில உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, இங்கே விவகாரம் செய்யுங்கள் என்று அனுப்பியிருக்கிறார்கள்போல இருக்கிறது. அந்தக் கட்சிக்கே இது நன்றாக இருந்தால் சரிதான். திரு. வேடியப்பன்.

## 3. கவன ஈர்ப்பு-தொடர்ச்சி.

### (ஆ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் போளூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து-தொடர்ச்சி

**திரு. தா. வேடியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூரைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து ஒரு நாளைக்கு ஏறத்தாழ 75,000 லிட்டர் பால் உற்பத்தியாகிறது. இதிலே குறிப்பாக நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு, அதிக அளவில் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டு, அதிக அளவில் பால் உற்பத்திச் செய்யப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இங்கே இதற்கு முன்னாலே பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தாலும் நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் அரசின் சார்பில் போளூரில், இதனை தேசிய பால் வள வாரியத்தின் மூலமாகவோ அல்லது ஊரக வளர்ச்சி முகமை மூலமாகவோ, எப்படியோ ஒரு திட்டத்தில் அமைக்க இதயதெய்வம் அவர்களின் அரசு சார்பில் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11.20*

**மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே், உறுப்பினரின் கோரிக்கை ஆய்வில் இருக்கிறது. ஆய்வுக்குப் பின் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### ஊராட்சிகள் சட்ட முன்வடிவு, 1994

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்ட முன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.